பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் மாதாந்தரத் தமிழ் பத்திரிகை)

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

—: o :—

" முயற்சி திருவினை யாக்கும் "

தொகுதி 19 | ஜய வூ பங்குனி மீ 1955 மார்ச் | பகுதி 12

CONNEMARA PUBLIC LIBRARY 7 - AUG 1956 MADRAS

1309 அ

பொருளடக்கம்

பக்கம்

1. இந்தியாவுக்கு வந்த அந்நியர்கள்—டேவர்னியர் —V. நடராஜன் ... 167
2. கணக்கு : கற்பித்தல் —T. S. ராஜகோபாலன், B A., L.T. ... 169
3. எல்லா வகுப்புக்களிலும் சுவபாஷா பாட போதனை —"வீரகேசரி" ... 174
4. செய்தித் திரட்டு ... 175
5. கடிதப் பெட்டி ... 178
6. N. U. T. இங்கிலாந்தின் தேசீய ஆசிரியர் சங்கம் —S. நடராஜன் ... 179
7. பத்திராதிபர் குறிப்புக்கள் ... 181

MEMBERS OF THE JOURNAL COMMITTEE

Sri S. NATARAJAN
" R. KRISHNAMURTHY
" K. KURUVILA JACOB
" T. P. SRINIVASAVARADAN
" V. NATARAJAN
" V. ARUNAJATAI
" L. MARIAPRAGASAM

Sri S. MARIA JOSEPH
" J. VAIDYANATHAN
" G. SRINIVASACHARI
" C. RANGANATHA AIYENGAR, *Secretary*
" V. B. MURTHI, *Asst. Secretary.*

உள் நாடு : வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதி ரூ. 0—4—0



SRI E. H. PARAMESWARAN, M.A., L.T., M.L.C.

President :

The XLV Madras State Educational Conference, Cuddalore, N.T.

May 1955.

பாலர் கல்வி

தொகுதி 19 | ஜய ஹு பங்குனி மீ 1955 மார்ச் | பகுதி 12

இந்தியாவுக்கு வந்த அந்நியர்கள்—டேவர்னியர்

வி. நடராஜன்

பண்டைக் காலம் முதல் பொன்னும் வைரமும் விளையும் நாடு எனப் புகழ் பெற்றது நம் பாரத நாடு. வியாபாரத்திற்காக இந்தியாவுக்கு வந்த அந்நியர்களில் டேவர்னியர் ஒருவன். அவன் புகழ்பெற்ற வைர வியாபாரி.

ஜீன்பாப்டிஸ்ட் டேவர்னியர் பாரிஸ் நகரத்தில் 1605ல் பிறந்தான். அவன் தந்தையிடம் பல வியாபாரிகள் வந்து பிற நாடுகளைப்பற்றிப் பிரமாதமாக வர்ணிப்பதை இள வயது முதல் கேட்டிருந்த டேவர்னியர் தானும் பிரயாணம் செய்ய ஆசை கொண்டான். 22 வயதிற்குள் ஐரோப்பிய நாடுகளில் சுற்றிவிட்டு 1631ல் பெர்ஷியாவுக்குப் பிரயாணமானான். முத்துக்கள், ரத்னங்கள், நகைகள் வியாபாரத்தில் முனைந்தான்.

1640ல் அவன் இந்தியாவுக்கு முதன் முதலாக வந்தான். பிறகு அடிக்கடி வரத் தொடங்கினான். வைரங்கள், உற்பத்தியில் முதல் இடம் பெற்றிருந்தது இந்தியா. ராஜாக்களும், பிரபுக்களும், தனிகர்களும் ஏராளமாக நகைகளையும் மணிகளையும் ரத்னங்களையும் வாங்குவார்கள். நாடெங்கும் நகை வியாபாரிகள் மலிந்திருந்த காலம். வைர வியாபாரிகளை அரசர்களே நேரில் பார்த்து பேரம் பேசி வாங்குவார்கள். டேவர்னியருக்குச் சிறப்பான மரியாதையும் கௌரவமும் கிடைத்தது.

இந்தியா வந்த ஒவ்வொரு தடவையிலும் டேவர்னியர் கோல்கொண்டாவினருகே உள்ள வைரக்கனிகளுக்குச் சென்றான். கற்களைத் தேடும் மக்களைப் பார்த்தான். அவர்கள் கற்கள் எடுக்கும் விதத்தையும் பிறகு கற்களைத் தேய்த்து பட்டை தீட்டித் தயார் செய்யும் முறைகளையும் கவனித்தான். வைர வியாபாரிகளிடம் ஏராளமான கற்களை வாங்கினான். ஒவ்வொரு பேரத்திலும் அரசாங்கத்திற்கு 2 சதவீதம் வருமானம் உண்டு.

வைரங்கள் வாங்கிய பிறகு பிரபுக்களிடமும் மன்னர்களிடமும் போய் விற்பனை செய்வான். சேனாபதி மிர் ஜம்லா, கோல்கொண்டா நவாப், கவர்னர் ஷையிஸ்டா கான், இந்திய ராஜாக்கள் எல்லாரிடமும் பேசிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. சூரத் துறைமுகத்திலிருந்து பரோடா, ஆக்ரா, டில்லி, அல்லஹாபாத், பனாரஸ், பாட்னா முதலிய இடங்களுக்குச் சென்றான். மசூலிப்பட்டணத்திலிருந்து சென்னை, சான்தோம், திருப்பதி, கோல்கொண்டா சுரங்கங்களுக்குப் போனான். தான் பார்த்த ஊர்களைப் பற்றியும் ஜனங்கள் வாழ்க்கையைப் பற்றியும் வர்ணித்து எழுதி யிருக்கிறான்.

அவன் பிரயாண முன் பகுதியில் ஷாஜஹான் சக்ரவர்த்தி ஆட்சி செய்திருந்த காலம். பொன்னும் வைரமும் இந்தியாவில் குவிந்த மகோன்னத காலம் அது. வைர வியாபார அனுபவங்களை டேவர்னியர் மிக அழகாக வர்ணிக்கிறான். ராஜாக்களை பேட்டி காணுமுன் இடையே உள்ள சிப்பந்திகளுக்குப் பரிசுகள் கொடுக்கவேண்டும். ஏன், ராஜாவுக்கும் முதல் மரியாதையாக காணிக்கைப் பரிசு தர வேண்டும். வியாபாரம் முடிந்த பிறகு ராஜாவும் பொன்னாடை போர்த்திப் பரிசு தந்து கௌரவிப்பதும் உண்டு.

டேவர்னியர் வியாபாரம் இந்தியாவில் மட்டுமில்லை. இந்தியாவில் வாங்கிய வைரங்களை போர்த்துகீஸிய வியாபாரிகளுக்கும் இங்கிலிஷ் வியாபாரிகளுக்கும் விற்றான். கிழக்கு இந்தியத் தீவுகளுக்கும் சென்றான். வரும்போதும் போகும்போதும் பெர்ஷியா மன்னரிடம் விற்பனை செய்தான்.

1662ல் அவன் பாரிஸ் திரும்பிய பிறகு மணம் செய்து கொண்டான். அப்போது அவனுக்கு 56 வயது. கோடீஸ்வரனுகிவிட்டாலும் டேவர்னியர் மற்றும் ஒருமுறை இந்தியாவிற்கு வந்தான். இப்போது அவனிடம் பல இலட்ச ரூபாய்கள் மதிப்பு உள்ள சரக்குகள் இருந்தன. சூரத்தில் அவன் இறங்கியவுடன் அவுரங்கசீப் சக்ரவர்த்தியிடமிருந்து கட்டளை வந்துவிட்டது. அவனிடம் உள்ள வைரங்களை எல்லாம் சக்ரவர்த்தி முதலில் பார்த்துப் பொறுக்கி எடுத்துக்கொண்ட பிறகுதான் மற்றவர்களுக்கு விற்கலாம். டேவர்னியர் அதிருஷ்டத்திற்கு என்ன குறை!

ஷாஜஹானபாத், அதாவது பழைய டில்லி, சென்று சக்ரவர்த்தியின் பேட்டி கண்டான். முன் எச்சரிக்கையாக தர்பார் பிரபுக்களுக்குப் பல பரிசுகள் அளித்தான். 5000 பவுன் மதிப்புள்ள பரிசுகளாம். பிறகு சக்ரவர்த்தியிடம் நல்ல வியாபாரம். பல ரத்னங்களையும், வைரங்களையும் விற்ருன். 1665 நவம்பர் 9ந் தேதி அவுரங்கசிப் பிறந்த நாள். அவர் விரும்பியபடி அந்த வைபவத்தைப் பார்த்தான். துலாபாரம் நடந்ததுஅதாவது ஒரு தராசுத் தட்டில்சக்ரவர்த்தி வீற்றிருந்தார். மற்றொரு தட்டில் அவர் எடைக்குச் சரியாக நகைகளும் பொன்னும் வைக்கப்பட்டன. பிறகு அவைகளை எடுத்துவிட்டு, வெள்ளி, பட்டு ஆடைகள், நவதானியங்கள் என்று வரிசைக் கிரமமாக எடை போட்டு எடுத்து வைத்தார்கள். இவைகளை யெல்லாம் சக்ரவர்த்தி தானம் செய்தார். இப்போது கூட துலாபார விழா சில சமயம் நடைபெறும். சில வருஷங்களுக்கு முன் ஆகாகான் அரசருக்கு இவ்வித வைர விழா கொண்டாடப்பட்டது உங்களுக்குத் தெரியுமா?

டேவர்னியருக்கு இன்னொரு அதிருஷ்டமும் கிடைத்தது. சக்ரவர்த்தி பொக்கிஷத்தில் உள்ள வைரங்களையும் ரத்னங்களையும் பார்க்கும்படியான சந்தர்ப்பம் யாருக்கும் இதுவரை கிடைக்காத அதிருஷ்டம் இது. பிரசித்திபெற்ற கோஹினூர் வைரத்தை டேவர்னியர் பார்த்தான். கையில் எடுத்து நிறுத்தான். பிறகு அவுரங்சீபினிடம் விடை பெற்றுக்கொண்டு திரும்பினுன். டில்லியிலிருந்து டாக்காவுக்குப் போய் ஷையிஸ்டாகானிடம் வைரங்களை விற்றுவிட்டுத் தன் தாய்நாடு சேர்ந்தான்.

1668ல் பாரிஸ் சேர்ந்தபோது அவன் வயது 63. பிரெஞ்சு மன்னர் லூயி அழைத்து அவனிடம் வைரங்கள் வாங்கினுர். ஆப்போன் பிரபு என்று அவனுக்குப் பட்டம் வழங்கினுர்.

1675ல் 'ஆறு பிரயாணங்கள்' என்ற புத்தகத்தை டேவர்னியர் பிரசுரித்தான். அதிலிருந்து தான் நமக்கு இவ்விஷயங்கள் தெரியவரும். இந்திய நகரங்களைப்பற்றியும் கோவில்களைப்பற்றியும் அவன் வெகு ஆச்சரியமாக வர்ணித்திருக்கிறுன். முக்கியமாக வைர வியாபாரத்தைப்பற்றி வேறு யாரும் இவ்வளவு நன்ருக வருணித்ததில்லை. வைர வியாபாரம் நடைபெறுவதே ஒரு வேடிக்கை. விலை பேசுவது மிகவும் ரகஸ்யம். ஒருவிதப் பேச்சுமின்றி பேரம் முடியும். துணிக்குள் கைகளை மறைத்து வைத்துக்கொண்டு விரல்களால் தொட்டு அழுத்தி சமிக்ஞை மூலம் விலை நிச்சயமாகும். இரு கை விரல்களையும் பிடித்தால் பத்து நூறு என்று பொருள். ஒரு விரல் ஒரு நூறு என்று கணக்கு. இரண்டு முறை அழுத்தினுல் இரண்டு மடங்கு. பிறருக்குத் தெரியாமல் விற்பவனும் வாங்குபவனும் மாத்திரம் இப்படிப் பேசி பேரம் முடிப்பார்கள். இப்போதும் கூட வைர வியாபாரிகள் இதேமாதிரி சில இடங்களில் பேரம் செய்கிருர்கள்.

கோஹினூர் வைரத்தைப்பார்த்த டேவர்னியர் கூறும் விவரம் நமக்கு மிகவும் உதவி. கொல்லூர்களியில் இது அகப்பட்டது. மோட்டா நிலையில் அந்தக் கல் 756 காரட் எடை. மிர்ஜும்லா சேனுபதி அதை ஷாஜஹானுக்கு அளித்தான். பிறகு ஷாஜஹான் கட்டளைப்படி அது பட்டை தீட்டப்பட்டது. இதனுல் அதன் எடை 268 காரட் ஆகக் குறைந்துவிட்டது. டேவர்னியர் பார்த்தபோது பாதி (கோழி) முட்டை வடிவம். மிலியன் பவுண்டு விலை மதிப்பு. அதன் படத்தை டேவர்னியர் வரைந்திருக்கிருன். இப்போது கோஹினூர் எங்கிருக்கிறது தெரியுமா? நாடர்ஷா டில்லியைக் கொள்ளையிட்டபோது அது போய்விட்டது. பிறகு சீக் மன்னர் ரஞ்சிட்சிங்கிடம் வந்தது. இப்போது இங்கிலிஷ் அரசி மகுடத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கிறது.

வைர வியாபாரி டேவர்னியர் மூலம் நம் நாட்டைப்பற்றிப் பல விஷயங்களை நாம் அறிந்துகொண்டோம்.

By Courtesy of A. I. R. Madras.

கணக்கு : கற்பித்தல்

மூன்றாம் வகுப்பு

1. எண்கள் — 1000 வரை

T. S. ராஜகோபாலன், B.A., L.T.,

இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி

முன்னுரை

இரண்டாம் வகுப்பு வரையில் குழந்தைகள் நூறு வரையில்தான் கற்றிருக்கின்றனர். ஆயினும் அவர்களுக்கு உலகப் பழக்கம் முன்னிலும் அதிகம் ஏற்பட்டிருப்பதால் இந்த மூன்றாவது வகுப்பில் அவர்களுக்குக் கணக்குக் கற்பிப்பது சற்று எளிதாகும். கிராமத்திலுள்ள குழந்தைகள் தங்கள் தங்கள் கிராமத்தில் சில இடங்களில் நெல் 200 கலம், 300 கலம் விளைவு என்றும், தோட்டத்திலுள்ள தென்னை மரங்கள் 200, 300 என்றும் பிறர் சொல்லக் கேட்டிருப்பர்; தேங்காய்கள், மாங்காய்கள், பழங்கள் இவற்றை நூற்றுக் கணக்கில் சொல்லவுங் கேட்டிருப்பர். பட்டினங்களிலும் நகரங்களிலுமுள்ள குழந்தைகள் தங்கள் பெரியோர்களது சம்பளம் ரூ. 300, ரூ. 400 என்று சொல்லுவதையும், சில ஊர்கள் 200 மைல், 300 மைல் தொலைவிலுள்ளன என்று சொல்லுவதையும் கேட்டிருப்பர். ஆதலால் இந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு கணக்குக் கற்பிப்பது நலமாகும்.

100-லிருந்து 1000-வரையில் கற்பிப்பது சில ஆசிரியர்களுக்கு எளிதாகத் தோன்றும். ஆயினும் நம்மைக் குழந்தைகளது நிலையில் வைத்துக் கொண்டு பார்த்து, கற்க வேண்டிய நுணுக்கங்கள் எவை என்றும், இவற்றை எவ்வாறு கற்பிப்பது சாலச் சிறந்ததென்றும் முன்பாகவே நன்கு ஆராய்ந்து பின்புதான் விஷயங்களைக் கற்பிக்கவேண்டும். உதாரணமாக, 800, 830, 803, 833 என்ற எண்களை நாம் எளிதில் படிக்கலாம்; இந்த எண்களின் தராதரத்தை நாம் நன்கு அறிவோம். எனினும், இவற்றுள் எதை எதை முதலில் சொல்லி, பின்பு எதைக் கற்பித்தால் குழந்தைகள் இவற்றை நன்கு மனதில் தேக்கிக்கொள்ள இயலும் என்பதை நன்றாக ஆராய்ந்து கற்பிப்பதே ஒழுங்கான முறையாகும்.

100, 100-ஆக 1000-வரை எண்களின் பெயர்

உபகரணங்கள் : ஒவ்வொரு பெட்டியும் 10 விரைகள் அல்லது சோழிகள் கொண்ட காலி நெருப்புப் பெட்டிகள். இவ்வாறான நெருப்புப் பெட்டிகள் வரிசைக்கு 5-ஆக இரண்டு வரிசையாகவுள்ள கட்டுக்கள் சில, ஒவ்வொன்றும் அங்குலச் சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள 10 அங். × 10 அங். அட்டைத் துண்டங்கள்.

கற்பிப்பவர் : (ஒரு கட்டை அவிழ்த்து) இதில் எத்தனை பெட்டிகள் இருக்கின்றன?

குழந்தை : (எண்ணிப் பார்த்து) பத்து

கற்பிப்பவர் : ஒவ்வொரு பெட்டியிலும் எத்தனை விரைகள்?

குழந்தை : (எண்ணிப் பார்த்து) பத்து.

கற்பிப்பவர் : ஒரு கட்டில் எத்தனை விரைகள்?

குழந்தை : நூறு.

கற்பிப்பவர் : இதுமாதிரி ஒவ்வொரு கட்டிலும் எத்தனை விரைகள்?

குழந்தை : நூறு.

கற்பிப்பவர் : (தனித் தனியாக இரண்டு கட்டுக்களைக் காட்டி) இதில் எத்தனை விரைகள்? இதில் எத்தனை விரைகள்?

குழந்தை : நூறு—நூறு.

கற்பிப்பவர் : (இரண்டையும் சேர்த்து) மொத்தமாக எத்தனை விரைகள் என்று சொல்லுகிறேன். இதில் நூறு, இதில் நூறு; மொத்தம் இரண்டு தரம் நூறு. இதை இரண்டு நூறு அல்லது இருநூறு என்கிறோம்.

நூறும் நூறும் இருநூறு

கற்பிப்பவர் : (ஒரு அட்டைத் துண்டைக் காட்டி) இதில் எத்தனை கட்டங்கள்? எண்ணிப் பார்.

குழந்தை : நூறு.

கற்பிப்பவர்: (வேறொரு அட்டைத் துண்டைக் காட்டி) இதில் எத்தனை கட்டங்கள்?

குழந்தை. நூறு.

கற்பிப்பவர்: (இரண்டையும் அடுத்து அடுத்து) வைத்து இரண்டிலும் மொத்தம் எத்தனை கட்டங்கள்?

குழந்தை: இருநூறு.

இரண்டு நூறு இருநூறு, நூறும் நூறும் இரு நூறு.

கற்பிப்பவர்: (இரண்டு கட்டுக்களைக் காட்டி) இவற்றில் எத்தனை விரைகள்?

குழந்தை: இருநூறு.

கற்பிப்பவர்: (இன்னும் ஒரு கட்டைச் சேர்த்து) மொத்தம் எத்தனை கட்டுகள்?

குழந்தை: மூன்று.

கற்பிப்பவர்: இவை மூன்றிலும் சேர்ந்து மூன்று நூறு விரைகள், அதாவது முன்னூறு விரைகள்.

இருநூறும் நூறும் முன்னூறு; மூன்று நூறு முன்னூறு.

கற்பிப்பவர் மூன்று கட்டுக்களையும் தனித் தனியாகக் காட்டி, ஒவ்வொன்றிலும் நூறு இருப்பதையும், பின்பு மூன்றையும்சேர்த்து இவை மூன்றிலும் சேர்ந்து முன்னூறு இருப்பதையும் நன்கு உணர்த்தவேண்டும். இவ்வாறே மூன்று அட்டைத் துண்டுகளை அடுத்து அடுத்து வைத்து, இரண்டு நூறும் ஒரு நூறும் சேர்ந்து முன்னூறு, அல்லது தனித் தனியாக மூன்று நூறு சேர்ந்து முன்னூறு என்று கற்பிக்க வேண்டும்.

இவ்வாறே ஆயிரம் வரையில் கற்பிக்க வேண்டும். ஒன்பது நூறு தொள்ளாயிரம் என்பதில் தொள்ளாயிரம் என்ற சொல்லைச் சற்று நிதானித்துக் கற்பிக்க வேண்டும். குழந்தைகள் கவனிக்காமல் எழுநூறு, எண்ணூறு, தொண்ணூறு, ஆயிரம் என்று சொல்லி விடுவார்கள்.

எண்களின் பெயர்: சோதனை

1. ஐந்து நூறு...., ஆறு நூறு...., எட்டு நூறு...., ஒன்பது நூறு...., பத்து நூறு.....

2. முன்னூறு என்பது.....நூறு, எண்ணூறு என்பது....நூறு, ஆயிரம் என்பது..... நூறு.

3. இருநூறு, முன்னூறு, நானூறு; அடுத்தது......

4. நூறுலிருந்து ஆயிரம் வரையில் சொல்லு.

5. ஆயிரத்திலிருந்து நூறு வரையில் தலைகீழாகச் சொல்லு.

6. எண்ணூறு எழுநூறு; அடுத்தது...

7. முன்னூறும் நூறும்...

8. அறுநூறும் நூறும்...

9. நூறும் இருநூறும்...

10. நூறும் எண்ணூறும்...

புளிய விரைகளை ஒவ்வொன்றும் நூறு விரைகள் கொண்ட குவியல்களாகக் குவிக்கச் செய்து, குவியல்களைச் சேர்த்து முன்னூறு, நானூறு முதலியவற்றைக் காட்டச் செய்யலாம்.

100, 100-ஆக 1000-வரை இலக்கங்கள்

நூறு, இருநூறு, முன்னூறு,... இவற்றை வரிசைப்படி சொல்லி, அப்போதப்போது பின்வருமாறு கரும்பலகையில் எழுத வேண்டும்.

நூறு,	ஒரு நூறு,	100
இருநூறு,	இரண்டு நூறு,	200
முன்னூறு,	மூன்று நூறு,	300
... ...	... ...	...
எண்ணூறு,	எட்டு நூறு,	800
தொள்ளாயிரம்,	ஒன்பது நூறு,	900
ஆயிரம்,	பத்து நூறு,	1000

இதில் குழந்தைகள் தெரிந்துகொள்ள வேண்டுவன: (1) 100-லிருந்து 900-வரையில் ஒவ்வொன்றுக்கும் 3 இலக்கங்கள் உள்ளன. (2) 100, 200, 300, 400,... இவற்றில் நூறு என்பதைக் காட்ட, 1, 2, 3, 4, ... இவற்றிற்கப்புறம் இரண்டு பூஜ்யங்கள் போடவேண்டும்.

10, 100; 20, 200; 30, 300;... இவை ஒவ்வொன்றிலுமுள்ள ஜோடி எண்களின் பேதத்தைக் குழந்தைகள் நன்கு அறிந்து கொள்ளும்படி பின்வரும் அட்டவணையை அமைக்கலாம்.

பத்து	10	நூறு	100
இருபது	20	இருநூறு	200
முப்பது	30	முன்னூறு	300
...	...	...	...
எண்பது	80	எண்ணூறு	800
தொண்ணூறு	90	தொள்ளாயிரம்	900
நூறு	100	ஆயிரம்	1000

இலக்கங்களில் பயிற்சி

1. கரும்பலகையில் ஒரு வரிசையில் 10, 20, 30, 40,..., 90, 100 என்று ஒன்றின் கீழொன்றும், வேறொரு வரிசையில் 100, 200, 300, 400,..., 900, 1000 என்று

ஒன்றின் கீழொன்றுமாக எழுதி, பின் வரும் எண்களைக் காட்டச் சொல்லுவது :

இருநூறு, எண்ணூறு, ஐந்நூறு, தொள்ளாயிரம், ஆயிரம், எண்பது, முன்னூறு, தொண்ணூறு, எழுநூறு, ஆயிரம், நூறு, எண்ணூறு, எண்பது.

2. பின்வரும் இலக்கங்களைப் படித்துக் காட்டு :

200,	600,	800,	900,	1000,
20,	70,	60,	80,	90,
30,	300,	100,	1000,	800.

3. பின்வரும் இலக்கங்களில் காலி இடத்தில் வேண்டிய பூஜ்யங்களைப் போடு :

முப்பது :	3...	எழுநூறு :	7...
எண்பது :	8...	தொள்ளாயிரம்:	9...

4. பின்வருவனவற்றுள் எது பெரியது ?

600, 800	எழுபது, எண்ணூறு
700, 900	அறுநூறு, அறுபது
80, 800	எண்ணூறு, தொண்ணூறு
400, 40	எண்ணூறு, ஆயிரம்

5. பின்வரும் கோவையில் காலி இடத்தில் இருக்கவேண்டியது என்ன ?

200, 300, 400, ..., ...
600, 700, 800, ..., ...
800, 700, ..., ..., 500
..., ..., 800, 700, 600

100-லிருந்து 10, 10-ஆக எண்கள்

உபகரணங்கள் : முன்புபோல்

கற்பிப்பவர் : (ஒரு கட்டையும் ஒரு நெருப்புப் பெட்டியையும் காட்டி) இந்தக் கட்டில் எத்தனை விரைகள் ? இந்தப் பெட்டியில் எத்தனை விரைகள் ?

குழந்தை : நூறு—பத்து.

கற்பிப்பவர் : (இரண்டையும் சேர்த்து) ஒரு கட்டிலும் ஒரு பெட்டியிலும் சேர்ந்து மொத்தம் விரைகள் நூறும் பத்தும். இதை நூற்றுப் பத்து என்கிறோம்.

நூறும் பத்தும் நூற்றுப் பத்து.

இதே மாதிரி ஒரு கட்டுடன் இரண்டு பெட்டிகளைச் சேர்த்து

நூறும் இருபதும் நூற்றிருபது.

என்று கற்பிக்கவேணடும். இவ்வாறே நூற்றுத் தொண்ணூறு வரையிலும் கற்பிக்க வேண்டும். பின்னர் 100-ஐக் காட்டும் அட்டையை வைத்து அதன் பின் 10, 20, 30, ..., 90 இவற்றைக் காட்டும் அட்டைகளை ஒவ்வொன்றாக அமைத்து மொத்தம் 110, 120, 130, ..., 190 என்று குழந்தைகள் சொல்லும்படி செய்யவேண்டும். இதன் மூலம் குழந்தைகள் தெரிந்து கொள்ளவேண்டுவன.

(1) 100-ம் 10-ம் 110.
(2) 110-ம் 10-ம் 120; 100-ம் 20-ம் 120
(3) 120-ம் 10-ம் 130; 100-ம் 30-ம் 130
....

குழந்தைகள் 100-லிருந்து 200-வரையில் 10, 10-ஆக எண்ணத் தெரிந்து கொண்டபிறகு இந்த இலக்கங்களை எழுதத் தெரிந்துகொள்ள வேண்டும். கற்பிப்பவர் பின்வருமாறு சொல்லிக் கொண்டே கரும்பலகையில் எழுதவேண்டும்.

நூறும் பத்தும் நூற்றுப் பத்து:	110
நூறும் இருபதும் நூற்றிருபது :	120
நூறும் முப்பதும் நூற்று முப்பது:	130
... ...	...
நூறும் தொண்ணூறும் நூற்றுத் தொண்ணூறு	190
நூறும் நூறும் இருநூறு	200

11, 110; 12, 120; 13, 130;...

இவை ஒவ்வொரு ஜோடியிலுமுள்ள இலக்கங்களின் வேறுபாட்டைக் குழந்தைகள் நன்கு அறிந்து கொள்ளுமாறு செய்ய வேண்டும்.

பயிற்சி

1. (11, 12, 13, ..., 20 இவற்றை ஒன்றின் கீழொன்றாக ஒரு வரிசையிலும், 110, 120, 130, ..., 200 இவற்றை ஒன்றின் கீழொன்றாக ஒரு வரிசையிலும் எழுதி) பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்டச் செய்யலாம்:

நூற்றிருபது, நூற்றெண்பது, நூற்றுப் பத்து,

பதினொன்று, பதினெட்டு, பத்தொன்பது,

பதினேழு, நூற்றெழுபது, பதினாறு, நூற்றறுபது.

2. பின்வருவனவற்றைப் படி :

130,	170,	150,	190,	200
18,	180,	19,	190,	20

3. பின்வரும் ஜோடிகள் ஒவ்வொன்றிலும் எது பெரியது ?

190, 150	19, 190	100, 200
90, 190	18, 180	130, 110

4. பின்வரும் கோவையுள் காலி இடத்தைப் பூர்த்தி செய்:

130, 140, 150, ...
160, 170, 180, ...
200, 190, 180, ...
150, 140, 130, ...

100-முதல் 200-வரையில் 10, 10-ஆக எண்களைக் கற்பித்த பின்பு, முன்சொல்லிய உபகரணங்களைக் கொண்டே 200-முதல் 300-வரையிலும், பின்பு 300-முதல் 400-வரையிலும் 10, 10-ஆக எண்களைக் கற்பித்து இதுவரை கற்ற விஷயங்களில் போதிய பயிற்சியை அளித்துப் பின்பு 400-முதல் 1000-வரை 10, 10-ஆகக் குழந்தைகளையே சொல்லுமாறு செய்து எண்களை இலக்கங்களாக எழுதவும் செய்யவேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் தேற்சி யுற்றபின்னர் 10, 10-ஆகத் தலைகீழாக இறக்கிச் சொல்லவும் செய்யவேண்டும். உதாரணமாக, 100-லிருந்து 200-வரையில் கற்ற பின்னர் 200, 190, 180, ... என்று தலைகீழாகவும், இவ்வாறே 300, 290, 180, ... என்று தலைகீழாகவும் சொல்லச் செய்யவேண்டும்.

சோதனை

1. இந்த எண்களைப் படி:

600, 670, 680, 690, 610
730, 830, 930, 230, 430
35, 350, 43, 430, 720, 72

2. இலக்கங்களாக எழுது:

நானூறு, நானூற்றுப் பத்து, நானூற்றெழுபது, நானூற்று நாற்பது.

இருபத்தைந்து, இரு நூற்றைம்பது, நானூற்றைம்பது, நாற்பத்தைந்து.

3. பின்வரும் ஜோடிகள் ஒவ்வொன்றிலும் எந்த எண் பெரியது?

630, 730	38, 380
850, 350	730, 73
380, 370	90, 900
930, 990	910, 900

4. 300-ம் 20-ம் = ...
500-ம் 10-ம் = ...
700-ம் 90-ம் = ...
650 = 600-ம் ......
910 = 900-ம் ......

100-லிருந்து 1, 1-ஆக எண்கள்

100-லிருந்து 110-வரையில் 101, 102, 103... என்பனவற்றைக் கற்கும்போது குழந்தைகளுக்கு 101, 110; 102, 120;... இவை போல்வனவற்றின் பேதம் முதலில் ஏற்பது சற்று கடினமாதலால், 111-லிருந்து 200-வரையில் கற்பித்துப் பின்னர் 101-லிருந்து 110-வரையில் கற்பிப்பது நன்றாகும்.

உபகரணங்கள்: அங்குலச் சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள 10 அங். × 10 அங். அட்டைத் துண்டு, இதேமாதிரி 11, 12, 13, 14, ..., 19 அங்குலச் சதுரங்கள் அடையாளஞ் செய்யப்பெற்ற தனித்தனி அட்டைத் துண்டுகள்.

கற்பிப்பவர்: (100 சதுரங்களுள்ள அட்டைத் துண்டையும், 11 சதுரங்களுள்ள அட்டைத் துண்டையுங் காட்டி) இதில் எத்தனை கட்டங்கள்? இதில் எத்தனை?

குழந்தை: 100, 11.

கற்பிப்பவர்: இரண்டிலும் சேர்ந்து மொத்தம் நூறும் பதினொன்றும், அதாவது நூற்றுப் பதினொன்று.

நூறும் பதினொன்றும் நூற்றுப் பதினொன்று; 111.

இவ்வாறு 119-வரையில் கற்பித்து,

நூறும் இருபத்தொன்றும் நூற்றிருபத்தொன்று; 121.

நூறும் இருபத்திரண்டும் நூற்றிருபத்திரண்டு; 122

என்று இவ்வாறு 200 வரையில் கற்பிக்க வேண்டும்.

பின்னர், 100 சதுரங்களுள்ள அட்டைத் துண்டை அடுத்து ஒரு சதுர அங்குலமுள்ள அட்டைத் துண்டை அமைத்து மொத்தம் கட்டங்கள் நூறும் ஒன்றும், அதாவது நூற்றொன்று என்று கற்பிக்க வேண்டும்.

நூறும் ஒன்றும் நூற்றொன்று; 101.

101-க்கும் 110-க்கும் உள்ள வேறுபாட்டை அட்டைத் துண்டுகளைக்கொண்டு நன்கு விளக்கிப் பின்னர்

100-ம் 1-ம் 101, 100-ம் 10-ம் 110

என்று கரும்பலகையில் எழுதவேண்டும். இவ்வாறே 109-வரையில் கற்பிக்க வேண்டும்.

பயிற்சி:

1. இந்த எண்களைப் படி:

113, 123, 133, 153, 193
125, 175, 115, 195, 165
117, 137, 107, 197, 147
160, 106, 108, 180, 118

2. 100-லிருந்து 200-வரையில் வரிசைக்குப் பத்தாக 10 வரிசை இலக்கங்களை எழுதி, இவற்றுள் பின்வரும் எண்களைக் காட்டச் செய்வது:

நூற்றிருபது, நூற்றெட்டு, நூற்றெண்பது, நூற்றுப் பதினெட்டு.

நூற்றுப் பதினேழு, நூற்றேழு, நூற்றெழுபது, நூற்றறுபது.

3. பின்வரும் ஜோடிகள் ஒவ்வொன்றிலும் எந்த எண் பெரியது ?

101, 110	190, 109
120, 112	102, 112
130, 103	170, 117

4. பின்வரும் விவரங்களைப் படி:

இந்த ஊரில் 124 வீடுகள் இருக்கின்றன.

மதராஸ் இங்கிருந்து 108 மைல் தூரத்தில் உள்ளது.

இந்தத் தோப்பில் 112 தென்னை மரங்கள் உள்ளன.

இன்று தோப்பிலிருந்து 170 மாங்காய்கள் கொண்டு வந்தேன்.

இந்த மாதம் 193 ரூபாய் செலவாயிற்று.

100-லிருந்து 200-வரையில் கற்பித்த பின்பு, 200-ம் 1-ம் 201, 200-ம் 2-ம் 202, ...என்று இவ்வாறு சொல்லச் செய்து, இலக்கங்களை அவ்வப்போது எழுதவும் செய்யவேண்டும். அப்போதப்போது ஒவ்வொரு நாளும் மேலுள்ளவாறு பயிற்சிகள் அளிக்கவேண்டும். குழந்தைகள் இவ்விஷயங்களைச் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை எனில், மறுபடியும் இவற்றைக் கற்பித்துப் பயிற்சி பெறச் செய்யவேண்டும். இவ்வாறு 1000-வரையில் கற்பித்த பின்பு, பின்வரும் சோதனையின் மூலம் குழந்தைகளின் ஆற்றலை அறிந்துகொள்ளலாம்.

சோதனை

1. இந்த விவரங்களைப் படி: மேலை வீதி 213 வீடுகள், தெற்கு வீதி 173 வீடுகள், போஸ் சாலை 312 வீடுகள்.

எதில் வீடுகள் மிக அதிகம்? எதில் மிகக் குறைவு ?

2. கரும்பலகையில் தேசப் படம் வரைந்து, அதில் மதராஸிலிருந்து தஞ்சாவூர், மைசூர், பம்பாய், நெல்லூர் முதலியன குறுக்காக எவ்வளவு தூரம் என்று படத்திலேயே குறித்து ஒவ்வொன்றையும் படிக்கச் செய்யலாம். எது மதராஸிலிருந்து மிக அதிக தூரத்தில் உள்ளது?

3. சில பள்ளிக்கூடங்களிலுள்ள குழந்தைகள் :

பள்ளிக்கூடம் (1) : 313, பள்ளிக்கூடம் (2) : 273, பள்ளிக்கூடம் (3) : 237.

எதில் குழந்தைகள் மிக அதிகம் ?

4. இந்த வீட்டின் கதவிலுள்ள இலக்கம் 235. அடுத்த வீட்டின் கதவில் இருக்க வேண்டிய இலக்கம்......, அல்லது.........

5. சில எண்களைப் படித்து, அவற்றை இலக்கங்களாக எழுதச் செய்வது :

முன்னூற்றைந்து, ஐநூற்று மூன்று, ஐநூற்று முப்பது, முன்னூற்றைம்பது, முன்னூற்றைம்பத்து மூன்று.

6. பின்வரும் எண்களை ஏறும் வரிசையில் எழுது :

37, 73, 370, 730, 230.

7. பின்வரும் எண்களை இறங்கும் வரிசையில் எழுது :

90, 109, 190, 210, 130.

8. 200-ம் 13-ம்........
300-ம் 90-ம்.........
500-ம் 6-ம்.........
73 = ...பத்தும்......ம்
573 = ...நூறும்......பத்தும்......ம்
879 = ...நூறும்......பத்தும்......ம்
4 நூறும் 3 பத்தும் 7-ம் = ...

9. 3 இலக்கங்களில் மிகச் சிறிய எண்..., மிகப் பெரிய எண்......

10. 2 இலக்கங்களில் மிகச் சிறிய எண்..., மிகப் பெரிய எண்...

எல்லா வகுப்புக்களிலும் சுவபாஷா பாட போதனே

முற்றிலும் சாத்தியமென்கிறார் இந்தியத் தலைமை ஆசிரியர்

'பாடப் புத்தகங்களில்லாதது தடையாகாது

கொழும்பு, மார்ச் 14

'ஆரம்ப வகுப்பிலிருந்து பல்கலைக்கழகப் படிப்பு வரை எல்லா வகுப்புகளிலும் தாய்ப்பாஷையிலே பாடபோதனை செய்வது சாத்தியம்தான். விஞ்ஞானப் பாடங்களைப் போதிக்க போதிய அளவு புத்தகங்கள் தமிழிலும் இதர பிரதேச மொழிகளிலும் இல்லையென்பது சுவ பாஷா போதனையை அமுல் நடத்தாமலிருக்க ஒரு சமாதானமாகாது.'

இவ்வாறு சென்னை செண்ட் கேப்ரியல் ஸெகண்டரிப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரும், தென்னிந்திய ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவரும் அகில இந்திய ஆசிரியர்கள் சங்க சம்மேளனத்தின் ஸ்தல காரியதரிசியுமான ஸ்ரீ எஸ். நடராஜன் நேற்று 'கேசரி' பிரதிநிதியிடம் கூறினார்.

சுவபாஷையில் விஞ்ஞான போதனை

பிரிட்டிஷ் கவுன்ஸில் ஆதரவின்கீழ் பிரிட்டனிலிருக்கும் பள்ளிக்கூடங்களைப் பார்வையிடவும் அங்குள்ள ஆசிரியர்கள் ஸ்தாபனங்களோடு கலந்து பேசி அவை வேலைசெய்யும் முறைகளை ஆராயவும் செல்லும் ஸ்ரீ நடராஜன் நேற்றுக் காலை தலைமன்னார் ரயில் மார்க்கமாக கொழும்புக்கு வந்துசேர்ந்தார். அவரை அவரது பழைய மாணவர்கள் ஸ்டேஷனில் சந்தித்து மலர் மாலையணிவித்து வரவேற்றார்கள்.

சுவபாஷையில் பாடபோதனை செய்வதைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஸ்ரீ நடராஜன் பின்வருமாறு கூறினார் :—

தற்சமயம் தென்னிந்தியப் பள்ளிக்கூடங்களில் ஸெகண்டரிப் பள்ளிக்கூடங்களில் மட்டும்தான் தாய்ப்பாஷையில் பாடபோதனை நடக்கிறது. பல்கலைக்கழக வகுப்புக்களில் இன்னமும் ஆங்கிலத்தில் தான் பாடபோதனை நடைபெறுகிறது. தமிழ்ப் பல்கலைக்கழகமான அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் மொழியில் விஞ்ஞானப் பாடப் புத்தகங்களை இப்பொழுது வெ[illegible] ஏற்பாடு செய்து வருகிறது.

சகல பாடங்களையும் தாய்ப் பாஷையில் போதனைசெய்வது சாத்தியம்தான். தாய்ப் பாஷையில் போதிய அளவு விஞ்ஞானப் பாடப் புத்தகங்கள் இல்லையென்றும் ஆகையால் மேல்வகுப்புகளில் தாய்ப் பாஷைகளிலே பாடபோதனை செய்வது அசாத்தியமென்றும் சிலர் கூறுவது சரியான வாதமாகாது. உதாரணமாக ஸெகண்டரி வகுப்புக்களில் தாய்ப் பாஷைகளில் போதனைசெய்ய வேண்டுமென்று கூறிய பொழுதும் இப்படித்தான் வாதிக்கப்பட்டது. ஆனால் ஸெகண்டரி வகுப்புகளில் பிரதேச மொழிகளிலே பாடபோதனை செய்யும் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தவுடன் ஏராளமான பாடப்புத்தகங்கள் பிரதேச மொழிகளில் வெளிவரலாயின.

தேவையைப் பொறுத்து புத்தகங்கள்

மார்க்கெட்டில் தேவையைப் பொறுத்து சாமான்கள் குவிவதைப் போலத்தான் புத்தகங்களும். பிரதேசமொழிகளில் உயர் வகுப்புப் புத்தகங்களுக்குத் தேவையேற்பட்டால் ஆசிரியர்கள் ஏராளமான புத்தகங்களை எழுதி வெளியிடுவார்களென்பதில் சந்தேகமில்லை. ஆரம்பகாலத்தில் விஞ்ஞானச் சொற்களுக்குப் பொருத்தமான சுவபாஷா சொற்களைச் சிருஷ்டிப்பது சற்று கடினமாயிருக்கலாம். ஆனால் என்றைக்காவது ஒருநாள் இந்த நிலைமையை நாம் சமாளிக்கத்தானே வேண்டும்? விஞ்ஞானப் பாடங்கள் உள்பட உயர் வகுப்புகளில் எல்லாப் பாடங்களையும் சுவபாஷையில் போதிப்பதென்று ஏற்பட்டால் தேவையான புத்தகங்கள் விரைவில் பிரசுரிக்கப்பட்டுவிடுமென்பதில் சந்தேகமில்லை.

ஆசிரியர்களின் சம்பளப் பிரச்னை

தென்னிந்திய ஆசிரியர்களின் சம்பள நிலைமையைப்பற்றிக் குறிப்பிடுகையில் இந்தியாவில் ஆகக்குறைந்த வருமானமுடையவர்கள் ஆசிரியர்கள்தானென்றும் சமீப காலத்தில்தான் சென்னை ராஜ்யத்தில் ஆசிரியர்களின் நிலைமை சற்றே அபிவிருத்தியடைந்துள்ளதென்றும் பி. ஏ. பட்டதாரி

(177-ம் பக்கம் பார்க்க)

செய்தித் திரட்டு

(1) லெட்சுமிபுரம்

4-3-55ல் இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலையில் ஸ்ரீ மீனாக்ஷி சங்கக் கூட்டம் வித்தியாசாலை உதவி ஆசிரியர் திரு மகாதேவய்யர் அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப் பின் செ. வி. மாணவ மாணவிகளின் பாட்டுப் பேச்சு, நடிப்பு, கும்மி, கோலாட்டங்கள் நடைபெற்றன.

9-3-55ல் இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலையில் திருவள்ளுவர் விழா வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஜி. சுவாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இறை வணக்கத்திற்குப் பின் திருவள்ளுவர் பெருமையைப்பற்றித் தலைவர் அவர்களும், உதவி ஆசிரியர்களும் பேசினர். 4, 5 வகுப்பு மாணவ, மாணவிகள் ஒவ்வொருவரும் ஒரு அதிகாரம் திருக்குறள் ஒப்புவித்தனர்,

தலைவர் முடிவுரையில் ஒவ்வொருவரும் திருக்குறள் கற்க வேண்டியதன் அவசியம்பற்றி கூறியபின் எல்லோருக்கும் தின்பண்டம் நல்கி நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

(2) பெரம்பலூர்

14-3-55 மாலை பெரம்பலூருக்கு விஜயம் செய்த சென்னை முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்களுக்கு பெரம்பலூர் மேற்கு போர்டு ஆரம்பப் பள்ளியின் சார்பாக அப்பள்ளி 5-ம் வகுப்பு மாணவன் சங்கரநாராயணன் நல்வரவு கூறி, மாணவர்கள் நூற்ற நூலாலான மாலையொன்றை அணிவித்தான். மந்திரி அவர்கள் சிறுவனின் தைரியத்தை மெச்சிப் பரிவுடன் மாலையை அணிந்து கொண்டார்.

(3) நந்தன்கோட்டை

25-3-55ல் ஹரிஜனப் பள்ளி 35 மாணவ மாணவிகளும், ஆசிரியர் இருவரும் திருச்சிக்கு உல்லாசமாகச் சென்று, அர்ச் சூசையப்பர் கல்லூரி பொருட் காட்சி சாலையையும், பொன்னையா போட்டோ ஸ்டுடியோவையும், மலைக்கோட்டை தாயுமானவர் சுவாமி கோயில், உச்சிப் பிள்ளையார் கே[illegible] பழங்கால பல்லவர் கல்வெட்டுக் குகைகளையும், பார்வையிட்டு, பின்னர் பொன்னையா ஸ்டுடியோவில் ஒரு புகைப் படம் எடுக்கப்பட்ட பின்னர், ஊர் திரும்பினர்.

(4) வேலூர்

2-3-55ல் ராமலிங்கம் உயர்தர ஆரம்ப பாடசாலையில் Dr. உ. வே. சாமிநாத அய்யர் நூறுவதாண்டு விழா தலைமையாசிரியர் திரு. அ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் துவங்கியது. திரு. ஆல்பிரட் டேவிட் அவர்கள் ஐயரவர்களின் உருவப் படத்தை திறந்து வைத்தார். திருமதி சந்திரா அம்மையாரும் பல மாணவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். இசைகள் பல இசைக்கப்பட்டன. பின்னர் சங்கத்தின் நிரந்தரத் தலைவர் எம். குமாரசாமி அவர்களால் நன்றி கூறப்பட்டு, நாட்டு வாழ்த்தோடு இனிதே கலைந்தது.

(5) கடையம்

26-3-55ல் சத்திரம் கமிட்டி ஆரம்பப் பாடசாலையின் 49-வது ஆண்டு விழா கல்லிடைக்குறுச்சி, திலகர் வித்தியாலயத் தலைமை ஆசிரியர் ஸ்ரீ K. M. சுந்தரம் B.A., L.T., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. ஏராளமான பெற்றோர்கள் வந்திருந்தார்கள். தலைவர்களையும் மற்றெல்லோரையும் கரஸ்பாண்டெண்டு ஸ்ரீ K. அய்யாத்துரை அய்யரவர்கள் வரவேற்றுத் தலைவருக்கு மாலை சூடினார்கள். மாணவ மாணவிகள் நாடகம், நடனம், கும்மி, கோலாட்டம் முதலியவற்றில் பங்கு கொண்டு திறம்பட நடத்திக் காண்பித்தார்கள். விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கடைசியாகத் தலைமை ஆசிரியர் M. P. சுப்பிரமணியம் நன்றி கூற கூட்டம் தேசிய கீதத்துடன் முடிந்தது.

(6) திருச்சி.

15-3-55ல் சென்னை ராஜ்ய முதலமைச்சர் கனம் ஸ்ரீ K. காமராஜ் அவர்களுக்கு ஜில்லா ஹரிஜன நலப்பள்ளி ஆசிரியர்கள் யூனியன் சார்பில் மலர்மாலை சூட்டி, 14-8-54ம் தேதிய மகாநாட்[illegible]தீர்

மானங்களின் மீதும், 2-5-53ம் தேதிய பொதுக் கூட்டத்திய 1, 4, 6, 8 தீர்மானங்களின் மீதும் தக்க நடவடிக்கைகள் எடுத்து நன்மை நல்கும்படி, யூனியன் பொதுக் காரியதரிசி திரு. பி. எஸ். அந்தோனிசாமி அவர்களால் நேரில் மகஜர் சமர்ப்பிக்கப் பட்டது.

சென்னை சட்டசபை அங்கத்தினர்களுக்கு வேண்டுகோள்.

அன்புமிக்க ஐயா,

மக்கள் நன்மைக்குப் பணியாற்ற உறுதி கொண்ட நாட்டுப்பற்று மிகுந்த ஜனப் பிரதிநிதிகளாகிய உங்கள் முன்னர் எங்கள் விண்ணப்பத்தைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பல ஆண்டுகளாகவே ஆரம்ப ஆசிரியர்கள் மிகமிகக் குறைந்த சம்பளத்தில் குடும்ப வாழ்க்கை நடத்த வசதியற்று கடன் வாங்கி ஜீவனம் செய்யும் நிலையில் இருக்கிறார்கள். அரசாங்கமும் ஆரம்ப ஆசிரியர்கள் கஷ்டங்களை நன்கு அறிந்தே இருக்கிறது.

கல்வி முறையில் எத்தகைய சீர்திருத்தம் செய்தாலும் வகுத்த திட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கு திட்டத்தை நன்கு உணர்ந்து, பொறுப்புடனும், கடமையுணர்வுடனும், உற்சாகத்துடனும், மனமகிழ்ச்சியுடனும் வேலை செய்யும் ஆசிரிய சமூகத்தைத் தோற்றுவிக்க வேண்டும். ஆதலால் பசியாலும், கடன் தொல்லையாலும், ஏழ்மையாலும், அல்லற்படுகிற ஆரம்ப ஆசிரியர்களின் பொருளாதாரக் கஷ்டங்களை உடனடியாகப் போக்க முயற்சி செய்ய வேண்டியது, பொதுமக்கள், பெற்றோர்கள், ஜனப் பிரதிநிதிகள், அரசியலார் ஆகியோரின் கடமையும் பொறுப்புமாகும்.

குடும்பக் கவலையின்றி ஆசிரியர்கள் வாழ்ந்தால்தான் அவர்களிடம் ஒப்புவிக்கப் படும் மாணவ, மாணவிகள் பிற்கால பாரதத்தின் நற்பிரஜைகளாகவும், நல்லொழுக்கமுடைய சீலர்களாகவும் ஆவர்.

அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசியும் இதை உணர்ந்தே ஆசிரியர் நிலையை உயர்த்த வேண்டிய அவசியத்தையும் அவசரத்தையும் பற்றி பிரதேச காங்கிரஸ் கமிட்டிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்ய காங்கிரஸ் கமிட்டிகள் சர்க்காரிடமும் ஸ்தலஸ்தாபனத்திடமும் வற்புறுத்த வேண்டுமென்றும் குறிப்பிட்டிருப்பதை நினைவூட்டுகிறோம்.

பொதுக் காரியதரிசியின் சுற்றறிக்கைக் கிணங்க தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி நிறுவிய கல்விக் கமிட்டியார் முடிவு செய்த சிபார்சுக்கிணங்கவும், 44-வது இராஜ்யக் கல்வி மகாநாட்டின் தீர்மானத்திற்கிணங்கவும் சம்பள விகிதத்தை உடனே உயர்த்த 55—56 ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கி ஒரேவித யோக்கியதாப்பத் திரம்பெற்றுஒரே விதமான பாடதிட்டத்தை நடத்தும் ஆசிரியர்களுக்கு நிர்வாக வித்தியாசமின்றி ஒரே விதமான சம்பள விகிதம் நிர்ணயிக்குமாறு வரவு செலவு திட்டம் பொது விவாதத்தின்போதும், கல்வி மான்யக் கோரிக்கையின்போதும் சர்க்காரை வற்புறுத்துமாறு வேண்டுகிறோம்.

காங்கிரஸ் பொதுக் காரியதரிசியின் சுற்றறிக்கைக்குப் பிறகும் சம்பள உயர்வுக்கு சர்க்கார் பொருளாதாரம் இடம் தரவில்லை என்று இனியும் கூறியதையே கூறி காலதாமதம் செய்வது நீதியும், தர்மமல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆரம்ப ஆசிரியர்களின் தற்கால சம்பள விகிதம், காங்கிரஸ் கல்விக் கமிட்டி செய்த சிபார்சின் முடிவு, தென்னிந்திய ஆசிரியர்கள் சங்க மகாநாட்டின் கோரிக்கைகள் முதலியன அடியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தற்கால சம்பள விகிதம்

கிரேடு	எயிடெட்	ஸ்தல ஸ்தாபனம்	கவர்ன்மெண்ட்	எஸ். ஐ. டி.யு. கோரிக்கை	காங்கிரஸ் கல்விகமிட்டி சிபார்சு
செகண்டரி	40—1—48	40-1½-55-2-75	45-3-60-2-90	70—5—150	70—
உயர்தரம்	30—½—33	30—1—45	30—1—50	50—2—90	50—
கீழ்தரம்	20—	23—1—33	—		அடிப்படை சம்பளம் [illegible]

கனம் கல்வி மந்திரியே நிதி மந்திரியாகவும் இருப்பதால் கட்டாயம் கணிசமான சம்பள விகிதம் நிர்ணயிப்பார் என்று நம்புகிறோம்.

உபாத்தியாயர் நிலைமை

"பள்ளிக்கூடங்களில் கல்வி திறமையாக இருக்க வேண்டுமென்றால் அதற்கு முக்கியமானவர் உபாத்தியாயர்தான். இந்தியாவில் ஆரம்ப, செகண்டரி, பள்ளி உபாத்தியாயர்களின் சம்பள விகிதங்களும், சர்வீஸ் நிலைமைகளும் படுமோசமாக இருக்கின்றன. இவைகளை கணிசமாக உயர்த்தாவிடில் கல்வி முன்னேற்றத்தை அதிகமாக எதிர்பார்க்க முடியாது என்று சர்வதேச செகண்டரி கல்வி கோஷ்டி சுட்டிக்காட்டியிருக்கிறது. திறமையற்ற பள்ளித் திட்டங்களால் கல்வியில் பணம் விரயமாவதையும் அதனால் உபாத்தியாயர்களின் சர்வீஸ் நிலைமை புறக்கணிக்கப்பட்டு வருவதையும் தேசம் இன்னமும் பூர்ணமாக உணரவில்லை" (ஸ்ரீ குருவில்லா ஜெகப்).

"சர்க்காருக்கு ஆரம்ப ஆசிரியர்களது குறைகள் தெரியாமலில்லை. சர்க்கார் அவர்களது நிலைபற்றி பரிசீலித்து வருகிறது. அவர்களது கஷ்டத்தை கணிசமாக நிவர்த்திக்கும் முறையில் சர்க்கார் முடிவு செய்யும்" கனம் K. காமராஜ், முதலமைச்சர் 13—2—55ல் (பெரியகுளம் தாலூகா ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டு துவக்க விழாவில் பேசியது)

ஆரம்ப ஆசிரியர்களின் நியாயமான சம்பள உயர்வு கோரிக்கையை ஆதரித்து சட்டசபையில் வற்புறுத்திப் பேசும் உங்களுக்கு மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
என். எஸ். வெங்கடேச்வரன்,
கல்வித் தொண்டன்,
அமைப்பாளர்,
மன்னார்குடி தாலூகா
ஆரம்ப ஆசிரியர்கள்
யூனியன்.

மன்னார்குடி,
22—2—55

(174-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர்களுக்கு ரூ. 85 முதல் 170 வரை மாதச் சம்பளம் கிடைப்பதாயும் ஸ்ரீ நடராஜன் கூறினார்.

விஞ்ஞான வகுப்புகளுக்கு கிராக்கி

இந்தியாவில் பெரும்பாலான மாணவர்கள் விஞ்ஞான வகுப்புகளையே நாடுகிறார்களென்று கூறிய ஸ்ரீ நடராஜன் சர்வகலா சாலைகளில் 80 சதவிகித மாணவர்கள் விஞ்ஞானப் படிப்புப் படிப்பதாயும் பி. ஏ., எம். ஏ. போன்ற 'ஆர்ட்ஸ்' படிப்பின் மதிப்பு குறைந்து பி. எஸ். ஸி, எம். எஸ். ஸி. போன்ற விஞ்ஞானப் படிப்பின் மதிப்பு தினே தினே அதிகரித்து வருவதாயும் சொன்னார். கொழும்பில் இரண்டு மூன்று தினங்கள் தங்கிவிட்டு புதன்கிழமையன்று அவர் லண்டனுக்குப் பிரயாணமாகிறார்.

—வீரகேசரி.

கடிதப் பெட்டி

எட்டாம் வகுப்பு அரசாங்கப் பரீட்சை

ஐயா,

1955 மார்ச் மாத இறுதியில் நடைபெற்ற அரசாங்க 8 ம் வகுப்புப் பரீட்சைக் கேள்வித் தாள்களில் அடியிற்கண்ட குறைபாடுகள் காணுகின்றேன்.

விஞ்ஞானம்: "எந்தச் சோதனையைக் கொண்டு, ஒரு அமிலத்தை காரத்தினின் றும் வேறு பிரித்தறிவாய்" என்பது 15-ஆம் கேள்வி. இது பாடத்திட்டத்திற்குப் புறம்பான கேள்வி. 1950 ஏப்ரலில் தயாரிக்கப்பட்ட பாடத் திட்டத்தில் சில பகுதிகளை விட்டு விடும்படி 1950 செப்டம்பரில் திருத்தம் இருக்கிறது. விட்டுவிடும்படியாகச் சொல்லப்பட்டிருக்கும் பாடத்திட்டப் பகுதியைச் சார்ந்து இருக்கிறது இக் கேள்வி. ஆகவே இக் கேள்விக்கு மாணவர்கள் பதில் எழுதுவது இயலாத காரியம். இதற்கு மார்க்கு 4. கேள்வி 18-ல் கேட்டபடி ஒரு முக்கோணம், ஒரு சதுரம் இவைகளின் புவி ஈர்ப்புத்தானம் காணுவது எப்படி? அவ் வடிவமுள்ள பொருட்களின் புவி ஈர்ப்புத்தானம் காணுவதுதான் முடியும். அதைக் காணும் முறையையும் 8-ம் வகுப்பு மாணவர்களிடமிருந்து எதிர்பார்ப்பது பொருந்தாது. அதற்கு மார்க்கு 6. இந்த இரு கேள்விகளையும் நீக்கி விடைத்தாள்களைத் திருத்துவதே மாணவன் நலனுக்குப் பொருந்தும். அதுவே நியாயமும் ஆகும்.

சமூக அறிவு நூல்: கேள்வி கேட்கும் முறை மாற்றப்பட்டிருக்கிறது. கேள்வி 5. b (4) டெக்கான் குவீன், கேள்வி 10 a மொஹெஞ்சதாரோ, கேள்வி 10h. காப்டன் குக் கண்டுபிடித்த கண்டம், இவை எட்டாம் வகுப்புப் பாடத்திட்டத்திற்குப் புறம்பானவை. கேள்வி 4 (lல் "தென்சிங் நார்கே" என்றதற்குப் பதில் "டென்சிங்" என்று கேட்டிருந்தால் மாணவர்களுக்கு நன்கு விளங்கியிருக்கும். கேள்வித்தாள் சிறிது கடினம் என்றே சொல்லவேண்டும். திருத்தும் பரீட்சாதிகாரிகள் தாராளமனப்பான்மையுடன் திருத்தாவிடில் பல மாணவர்கள் இப்பாடத்தில் தேறுவது கடினம்.

ஆகவே பரீட்சைக் கமிஷனர் அவர்கள் இதைக் கவனித்து வேண்டுவன செய்வார்கள் என எதிர்பார்க்கிறேன்.

குலசேகரன்பட்டினம்
31-3-1955. } R. M. கணபதி

தமிழ் உபபாட புத்தகங்கள்

புதிய பாடதிட்டத்திற்கேற்ப எழுதியவை

இப்புத்தகங்கள் நமது பள்ளிமாணவர், மாணவிகளின் ஆர்வத்தை ஊட்டும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன. பல படங்கள் உள்ளன.

தேச பக்த மாலை

வித்வான் எம். சண்முகம் பிள்ளை
எழுதியது
எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
அவர்களின் முகவுரையுடன் கூடியது

	அணா		அணா
1. மகாத்மா காந்தி	10	4. கவியரசி சரோஜினி	8
2. கவியரசர் தாகூர்	8	5. தேசீய கவிமணிகள் (பாரதியார், தாகூர், சரோஜினியார்)	12
3. தேசிய கவி பாரதியார்	8		

எம். அனந்த நாராயணன், பி. ஏ., எல். டி.
எழுதியவை

6. வீர சிவாஜி அணா 10 7. சுவாமி விவேகானந்தர் அணா 12

பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1

N. U. T.—இங்கிலாந்தின் தேசிய ஆசிரியர் சங்கம்

ஸ்ரீ S. நடராஜன்

இந்திய ஆசிரிய சகோதர சகோதரிகளுக்கு இங்கிலாந்திலுள்ள தேசிய ஆசிரியர் சங்கம், அல்லது நாஷனல் யூனியன் அப் டீசர்ஸ் என்னும் சங்கத்தைப் பற்றி நன் மதிப்புக் கொண்டுள்ளார்கள். இதைச் சுருக்கமாக N. U. T. என்பார்கள். இங்கிலாந்திலுள்ள ஆசிரியர்களில் பெரும் பகுதி இதில் அங்கத்தினர்கள். சுமார் 2,50,000 அங்கத்தினர்கள். இதில் சேராமலிருப்பவர்களின் எண்ணிக்கை குறைவே. அவர்களுக்கும் N. U. T. யிடம் பெரும் மதிப்பு உண்டு. அதன் உதவியையும் நாடுகிறார்கள்.

இச் சங்கத்தின் அங்கத்தினர்கள் பெரும்பாலும் ஆரம்ப பாடசாலை, செகண்டரி பாடசாலை, தொடர்புக் கல்விச்சாலை, பாலர் கல்விச்சாலை முதலியவைகளில் வேலைசெய்யும் ஆசிரியர்கள். இச் சங்கம் 1870-ம் ஆண்டில் ஸ்தாபனம் செய்யப் பட்டது. இந்த 85 வருஷங்களில் இது நல்ல வலுவுகொண்ட சங்கமாக வளர்ந்து, மதிப்பும், சக்தியும், சம்பத்தும் கொண்டுள்ள சங்கமாக விளங்குகிறது. இங்கிலாந்தில் அரசாங்கம் கல்விக்குச் சம்பந்தமுள்ள எந்த உத்திரவையும் இந்த சங்கத்தின் அபிப்பிராயத்தை அறியாமல் பிரப்பிப்பதில்லை. சங்க நிர்வாகஸ்தர் ஒருவர் என்னிடம் கூறினார்: 'எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதுமில்லாமல், அவர்களுடன் சர்ச்சை செய்த பிறகு உத்திரவின் வாக்கியம் தயாரித்துக் கொடுப்போம். அநேகமாக அதற்கு நல்ல ஆழ்ந்த கவனிப்பு கல்வி மந்திரியிடம் உண்டு' என்று பெருமையாகவே சொன்னார்.

இச்சங்கத்திற்கு இவ்வளவு மதிப்பும், சக்தியும் இருந்த பொழுதிலும், இதன் நிர்வாகஸ்தர்களும் சங்க அங்கத்தினர்களும், ஆழ்ந்த யோசனையும், வருங்கால நன்மையையும், கல்வி வளர்ச்சியையும், தேசிய பொருளாதார நிலையையும் கவனித்தே தீர்மானங்களும், ஆலோசனைகளும் செய்கின்றார்கள். ஆனால் யோசனையுடன் தீர்மானித்த விஷயத்தை ஒரு பிடிவாதத்துடன், நிதானமாக, படபடப்பும் ஆத்திரமும் இல்லாமல் நிறைவேற்றும் இயல்பு உடையவர்கள்.

இந்த ஸ்தாபனம் ஒரு தொழில் சங்கம் அல்ல. ஆசிரியர்களின் சம்பளம், அலவன்ஸ், வேலை நிபந்தனைகளில் எவ்வளவு சலுகைகள் பெறவேண்டுமோ அவைகளை அடைய கருத்துங்கண்ணுமாக இருக்கின்றது. எனினும் ஆசிரியர் வேலைக்கு முக்கியமானது மாணவர்கள் அல்லவா? எனவே, பாலர் கல்வி விஷயத்தை வெகு சிரத்தையுடன் ஆலோசித்து, பரிசோதித்துப் பார்த்து அரசாங்கத்துக்கு உதவி அளிக்கின்றது. இங்கிலாந்திலுள்ள பத்திரிகைகள்கூட கல்வி விஷயங்களை அறிய இச் சங்கத்தை நாடுகிறது. இச்சங்கத்தின் விளம்பர இலாகா வெகு திறமையுடன் பொது ஜனங்களுக்கும், ஜனத் தலைவர்களுக்கும் அப்பப்பொழுது விஷயங்களை எடுத்துக் காட்டுகின்றது. ஆசிரியர்கள் தங்கள் தொழிலில் ஈடுபட்டிருக்கும்பொழுது ஏற்படும் பல சட்ட இன்னல்களிலிருந்து அவர்களைக் காப்பாற்ற, சட்ட இலாகா ஒன்று உண்டு. அதில் இரண்டு அட்வகேட்டுகள் முழு நேரமும் வேலைசெய்து வருகின்றார்கள்.

இதன் அமைப்பு நமது தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் அமைப்பைப்போல ஓரளவு உள்ளது. ஒவ்வொரு ஆசிரியரும் இதில் மெம்பராகச் சேர, தனது ஸ்தல ஆசிரிய சங்கத்தில் மெம்பராகவேண்டும். ஸ்தல சங்கத்திற்கு, அதன் விதிப்படி உள்ள கட்டணம் செலுத்தவேண்டும். பிறகு N. U. T. க்காக ஆண்டுதோறும் 25 ஷில்லங்கு, அதாவது 17 ரூ. கட்டணம் செலுத்தவேண்டும். ஒவ்வொரு ஸ்தல சங்க மெம்பர் N. U. T. மெம்பராக இருக்கவேண்டும். சென்ற ஆண்டில் N. U. T. மெம்பர் கட்டண வருமானம்

2,06,850 பவுன். மெம்பர்கள் இந்தக் கட்டணம் செலுத்துவதில் வெகு கண்டிப்பாக இருக்கின்றார்கள். அரியர் (arrear) என்று சொல்லக் கூடிய தொகை 1500 பவுன் தான். இதிலிருந்து, ஆசிரியர்களின் சங்க ஆர்வம் எவ்வளவு என்பது விளங்கும்.

சங்கத்தின் நிர்வாகம், அதன் நிர்வாகக் கமிட்டியின் பொறுப்பு. இது மெம்பர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கொண்டது. இங்கிலாந்தை 11 ஜில்லாக்களாக இச்சங்கம் பிரித்துள்ளது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும், 500 மெம்பர்களுக்கு ஒரு பிரதிநிதியாக, பிரதிநிதித்வம் உண்டு. தேர்தல் தபால் மூலமாக நடைபெறும். மெம்பர்கள் ஆண்டு தோறும் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஒவ்வொரு வருஷமும் ஒரு உபத் தலைவர் தேர்ந்தெடுக்கப் படுவர். இவ்வாண்டு உபதலைவர் அடுத்த ஆண்டு தலைவர் என்ற முறை அனுசரிக்கப் படுகிறது. காரியதரிசியும், அவருக்கு உதவியாக பல உப காரியதரிசிகளும், நிரந்தரமாக அமர்த்தப் படுகிறார்கள். இவர்கள் நிர்வாகக் கமிட்டியின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவரவேண்டியதை செய்யவேண்டும். இவர்களுக்கு சம்பளமும் மற்ற சலுகைகளும் உண்டு.

ஆசிரியர்களுக்கு பல உதவிகள் அளிக்க இச்சங்கம் பல திட்டங்கள் கொண்டுள்ளது. T. P. S. என்பது ஒரு இன்ஷியூரன்ஸ் கம்பெனி என்றாலும் ஆசிரியர்களுக்கு அசௌக்கியம் குறைந்தபொழுது, உபகாரச் சம்பளத் தூக்கும் வியாதியினின்று குணமடையும் காலத்தில் கவனிப்புக்கும், வீடுகள் வாங்க உதவிக்கும் பல திட்டங்கள் செவ்வனே நடத்தப்படுகின்றன. இது தவிர பெருந்தொகை ஆயுள் இன்ஷியூரன்ஸும் Teacher Assurance Co, என்பதின் மூலம் உண்டு. School master என்பது இச்சங்கத்தின் வாரப்பத்திரிகை. தவிர, சகாயநிதி—Benevolent & Orphan Fund என்பது. சங்கத்தின் மெம்பர்கள் ஆண்டுக்கு 12 ஷில்லிங்குக்குக் குறையாமல் கட்டணம் அளிக்கின்றார்கள். தவிர டிராமா முதலிய நடத்தி பணம் வசூலிக்கின்றார்கள். இதைக் கொண்டு, ஆசிரியருக்கும், அவர்கள் இறந்தால் குடும்பத்தினருக்கும், உதவி அளிக்கிறார்கள்.

நமது முயற்சியாலே நாம் உயரவேண்டும் என்னும் நமது சங்கதின் கொள்கை இந்த சங்கத்திற்கு எவ்வளவு பயனளித்துள்ளது என்பது விளங்கும். இச் சமயத்தில் நமது பிரதிநிதிகள் தென்னாற்காடு மஞ்சக் குப்பத்தில் கூடியிருப்பது என் கண்முன் தோன்றுகிறது. நமது ஆசிரியர்கள் கட்டுப்பாடு, சங்கத்தில் நம்பிக்கை, நமது தொழிலை திறம்பட செய்ய வேண்டுமென்ற ஆர்வம், கல்வி முன்னேற்றத்துக்கு வழி காட்டுவது, நமது கடமை என்ற உள்ளம், நமது ஆசிரியர்களிடம் வளரவேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து, நமது மகாநாடு ஸ்ரீமான் E. H. பரமேஸ்வரன் தலைமையில் வெற்றிகரமாக நடக்க இறைவன் அருள் புரிவாராக.

சந்தாதாரர்களுக்கு அறிக்கை

1955 மார்ச் மாதத்துடனும் அதற்கு முந்தியும் முடிவடைந்து, செலுத்தப்படாத சந்தாக்களை சந்தாதாரர்கள் சீக்கிரமே செலுத்திவிடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தற்சமயம் அசௌகரியமுள்ளவர்கள் சந்தா செலுத்தக் கூடிய தவணையைத் தெரிவிக்கலாம். 1955 மே மாத முடிவுக்குள் சந்தா செலுத்தப் படாவிட்டால், அடுத்த இதழை வி. பி. யில் அனுப்ப நேரிடும்.

—பத்திராதிபர்.

பத்திராதிபர் குறிப்புக்கள்

பென்ஷன் திட்டம்

சென்னை சர்க்கார் 1955 ஏப்ரல் 1-ம் தேதி முதல் ஓய்வெடுக்கும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு பென்ஷன் உதவி அளிக்கப்போவதாக அறிவித்துள்ளனர். இதை நாம் மிகவும் சந்தோஷமாக வரவேற்கிறோம். கல்வி அமைச்சர் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் இதை சென்னை இராஜ்ஜிய அஸெம்பெளியில் அறிவித்தார். க்ஷேமநிதி வசதியுடன் சம்பளத்தில் கால்பாகம் பென்ஷனுக எல்லா ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் கிடைக்கும். மேலும் செகண்டரி பள்ளிச் சாலைகளில் உள்ள சில குறிப்பிட்டவகை ஆசிரியர்களுக்கும் இந்த அனுகூலம் அளிக்கப்படும். அதாவது இரண்டாவது கிரேடு பண்டிதர்கள், தேகப்பயிற்சி ஆசிரியர்கள், சங்கீத ஆசிரியர்கள், சித்திர ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள் முதலியவர்களாவர். ஆசிரியர்களுக்குப் பென்ஷன் திட்டம் அவசியம் என உணர்ந்து அதை உடனடியாக அமலுக்குக் கொண்டுவந்த பெருமை சென்னை இராஜ்ஜியத்திற்கே உரியது. முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்களையும் கல்வி அமைச்சர் ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்களையும் ஆசிரியர்கள் சார்பில் நாம் மிகவும் பாராட்டி அவர்களுக்கு நன்றி கூறுகிறோம்.

திட்டத்தை அமலுக்குக் கொண்டுவருமுன் அதற்கான பல விதிகளையும் முறைகளையும் வரையறுத்து நிச்சயப் படுத்த வேண்டும். பொதுவாக எல்லா ஆசிரியர்களுக்கும் பென்ஷன் திட்ட வசதி கிடைக்குமாறு செய்யவேண்டுமென தென் இந்திய ஆசிரிய சங்கத்து நிர்வாக சபை வேண்டுகோள் அனுப்பியிருக்கிறது. இதையும் பரிசீலித்து, ஆசிரியர்கள் யாவருக்கும் பென்ஷன் கிடைக்கும் வசதியை சென்னை சர்க்கார் அளிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

க்ஷேம நிதியும் இன்ஷியூரன்ஸ் திட்டமும்

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குக் கட்டாய க்ஷேம நிதித் திட்டம் சில ஆண்டுகளாகவே அமலில் இருந்து வருகிறது இதில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி ஆசிரியர் மகாநாட்டில் அடிக்கடி வற்புறுத்தி வருகிறோம்.

இதைத் தவிர கட்டாய இன்ஷியூரன்ஸ் திட்டமும் ஏற்படுத்தவேண்டுமென்பதே ஆசிரிய சங்கத்தின் கோரிக்கை. இதைப் பற்றியும் யோசித்து வருவதாகக் கல்வி அமைச்சர் கூறியுள்ளது கவனிக்கத் தக்கது. இந்த சந்தர்ப்பத்தில் தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின் சார்பில் நடைபெற்றுவரும் க்ஷேம நிதியைப் பற்றிப் பொதுவாக எல்லா ஆசிரியர்களுக்கும் விளம்பரப்படுத்த விரும்புகிறோம்.

S. I. T. U. Protection Fund இருபத்தேழு ஆண்டுகளாகத் தொண்டு செய்து வருகிறது. அதற்கெனத் தனிப்பட்ட சொந்த அலுவலகம் கட்டப்பட்டு வருகிறது. இவ்வாண்டு முடியுமுன் இப்புதிய கட்டிடத் திறப்பு விழா கொண்டாடப்படும்.

ஆரம்பப் பள்ளிகளுக்கு பூமிதானம்

சமீபத்தில் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியினர் ஒரு கல்வி உப கமிட்டியை நியமித்தது நினைவிருக்கலாம். அக்கமிட்டியினர் பள்ளி ஆசிரியர்களையும் சங்கங்களையும் கேட்டு விசாரித்து பிறகு சில யோசனைகளைத் தெரிவித்தனர். அவர்கள் சிபார்சுகளில் முக்கியமான சிலவற்றை சென்னை சர்க்கார் உடனடியாக ஏற்றுக்கொண்டது மிகவும் மெச்சுதற்கான விஷயம். க்ஷேம நிதி, பென்ஷன், இன்ஷியூரன்ஸ் திட்டம் முக்கியமானது. இதைத் தவிர ஒவ்வொரு கிராமப் பள்ளிக்கும் ஐந்து ஏக்கரா நில மானியம் ஒதுக்கித்தர வேண்டும் என சிபார்சு செய்திருந்தது.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் கூடுமானவரை அதையொட்டி 5 ஏக்கர் பரப்புள்ள விவசாயப்பண்ணை இருக்க வேண்டும் என்பதே ஆசிரியலார் உத்தேசம்

எனக் கல்வி அமைச்சர் தெரிவித்தார். புத்தாண்டு தொடங்கியவுடன் பள்ளிகளுக்கு பூமிதானம் வழங்கும் திட்டம் வெகு ஜரூராக எல்லா ஜில்லாக்களிலும் நிறைவேறி வருகிறது. கல்வி அமைச்சரே தனது கிராமத்தில் உள்ள பள்ளிச் சாலைக்கு இவ்விதம் பூமிதானம் செய்தது குறிப்பிடத் தக்கது. சமுதாய நலனுக்காக நமது கிராமங்களில் நிலமான்யம் கொடுப்பது மிகத் தொன்மையான பழக்கம். அதற்கேற்ப கல்விக்கு நில தானம் வழங்குவதுபற்றி எல்லாரும் ஆதரவு செய்வர். பள்ளிப் பண்ணையை நிர்வகிப்பதும் பயன்படுத்துவதும் பற்றிய விவரங்களை இனி நன்குகத் திட்டமிடுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஏழைக் குழந்தைகளுக்கு பகல் போஜனம் அளிப்பதைப்பற்றிய திட்டத்தை முதல் அமைச்சர் யோசித்து வருவதாகவும் அறிவித்திருக்கிறார்.

கல்வி முன்னேற்றத்திற்கான பலவித நல்ல ஏற்பாடுகள் புதிய வருஷத்தில் உருவகமாகும் என ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறோம்.

சென்னை இராஜ்ஜியக் கல்வி மகாநாடு

மே மாதம் 12, 13, 14 தேதிகளில் கல்வி மகாநாடு கடலூர் செயின்ட் ஜோசெப் ஹைஸ்கூல் ஹாலில் நடைபெறும். ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாடும் இதில் ஒரு அம்சமாகும். ஸ்ரீ E. H. பரமேஸ்வரன் M. L. C. அவர்கள் தலைமை வகிப்பார். மகாநாட்டில் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் டெலிகேட்டுகளாகப் பலர் ஒன்று கூடி, நல்லதொரு திட்டத்தை உருவாக்க உதவி செய்வார்கள்.

ஆரம்ப பாடசாலைக்குரிய எமது பாட புத்தகங்கள்

நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர் N. பரமசிவ அய்யர், பி. ஏ., எல். டி.

			அ.	பை
முதற் புத்தகம்	(முதல் வகுப்பு)	....	4	0
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	....	5	0
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	....	6	0
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	....	7	0
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	....	7	6

எமது புதிய கணக்குப் புத்தகங்கள் புதிய பாடதிட்டத்திற்கேற்ப பல புதிய நோக்கங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

கிண்டர்கார்டன் தினசரிக் கணக்கு

ஆசிரியர் S. ஜகந்நாதன்
(கிண்டர்கார்டன் உதவி ஆசிரியர், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, சென்னை)
J. ராமச்சந்திரன், B. A. (HONS.) M. ED. திருத்தியமைத்தது

முதற் புத்தகம்	(முதல் வகுப்பு)	....	அணு	5
இரண்டாம் புத்தகம்	(இரண்டாம் வகுப்பு)	....	,,	6
மூன்றும் புத்தகம்	(மூன்றும் வகுப்பு)	....	,,	10
நான்காம் புத்தகம்	(நான்காம் வகுப்பு)	....	,,	13
ஐந்தாம் புத்தகம்	(ஐந்தாம் வகுப்பு)	....	,,	14

பி. ஜி. பால் & கம்பெனி, புத்தக வியாபாரிகள்
4, பிரான்ஸிஸ் ஜோஸப் தெரு, சென்னை—1